OS : 36/2021

Date: 04.07.2026

பெயர் : **கணேசன் (வா.சா.1) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

தாவா சொத்தை எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்பதை காட்டுவதற்காக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வ.சா.ஆ.7 ஆக IP 16 ன் மனுவை தாக்கல் செய்திருக்கிறேன். உரிமை மூல ஆவணங்களையோ அல்லது வருவாய் துறை ஆவணங்களையோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.56/2005 ல் தாவா சொத்து பூர்வீக சொத்து என்று ஏற்கனவே தீர்ப்பாகியிருக்கிறது. அதனை வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி அ.வ.எண்.56/2005 ன் தீர்ப்பு ஒருதலைபட்ச தீர்ப்பு என்றாலும் அதை செல்லத்தக்க தீர்ப்பாக கருத முடியாது என்றாலும் சரியல்ல. பூர்வீக சொத்தை விற்பனை செய்து தான் தாவா சொத்தை கிரயம் பெற்றோம் என்பதை காட்ட ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து பூர்வீக சொத்து தான்.

பூர்வீக சொத்தை விற்று அந்த தொகையின் மூலம் தாவா சொத்தை கிரயம் பெற்றிருந்தால் பூர்வீக சொத்தை விற்றதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு தாக்கல் செய்ய இயலாததற்கு காரணமே நான் சொல்வது போல பூர்வீக சொத்து எதனையும் விற்று தாவா சொத்தை கிரயம் பெறவில்லை என்பதால் தான் என்றால் சரியல்ல. தாவா சொத்து தனிப்பட்ட முறையில் முத்துசாமி பெயரில் கிரயம் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. ஏற்கனவே மோசடியாக பெறப்பட்ட கிரயம் குறித்து என் தகப்பனார் தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.56/2005 ன் தீர்ப்பு எங்களுக்கு ஆதரவாக 2018 ம் ஆண்டு கிடைக்கப்பெற்றது. அந்த தீர்ப்பிலேயே தாவா சொத்து பூர்வீக சொத்து என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறது.

தாவா சொத்து யாருடைய பெயரில் இருக்கிறது என்றால் இன்னும் எங்கள் பெயருக்கு மாறவில்லை. 2018 ம் ஆண்டு கிடைத்த தீர்ப்பின்படி தாவா சொத்து சந்திரனுக்கு பாத்தியப்பட்டதல்ல என்பதற்காக தான் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம். உண்மையாகவே எங்களுக்கு 2018 ம் ஆண்டு பரிகாரம் கிடைக்கப்பெற்றிருந்தால் அதனை கொண்டு எங்கள் பெயருக்கு தாவா சொத்தை

மாற்றியிருப்போம் என்றாலும் இன்றுவரை தாவா சொத்தை எங்கள் பெயருக்கு மாற்றாததற்கு காரணமே எங்களுக்கு எந்த தீர்ப்பும் கிடைக்கப்பெறவில்லை என்பதால் தான் என்றால் சரியல்ல. என் அப்பா 2010 ம் ஆண்டு கொலை செய்யப்பட்டு இறந்துவிட்டார். அந்த காலத்தில் நாங்கள் படித்துக்கொண்டிருந்தோம். 2018 ம் ஆண்டு தீர்ப்பு கிடைக்கப்பெற்றது எங்களுக்கு தெரியவந்த பின்னர் தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம்.

நான் 2010 ம் ஆண்டு என்ன படித்துக்கொண்டிருந்தேன் என்றால் B.E.Mechanical படிப்பு படித்துக்கொண்டிருந்தேன். என் சகோதரர் என்ன படித்துக்கொண்டிருந்தார் என்றால் அவர் படிப்பை முடித்து விட்டு Telecom துறையில் Executive ஆக வேலை செய்து வந்தார். 2010 ம் வருடத்தில் நானும் என் சகோதரும் படித்துக்கொண்டிருந்ததாலும் வேலை செய்து கொண்டிருந்ததாலும் எங்களுக்கு வழக்கு விவரம் தெரியவில்லை என்று சொல்வது பொய் என்றாலும் நாங்கள் விஞ்ஞான உலகத்தில் நல்ல அறிவில் நல்ல குடும்ப சூழ்நிலையில் வாழ்ந்து வந்ததால் எங்களுக்கு வழக்கின் நடவடிக்கை குறித்து தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 2010 ம் ஆண்டு என் அப்பாவை சந்திரன் என்பவர் கொலை செய்த பின்னிட்டு என் அப்பாவின் கொலை வழக்கை தான் 2015 ம் ஆண்டு வரை பார்த்துக்கொண்டுவந்தோம், எனவே இந்த வழக்கை பற்றி எங்களுக்கு தெரியவரவில்லை.

தாவா சொத்துக்கும் குற்ற வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. கொலை செய்ததே எதிர் தரப்பினர் தான். கொலைக்கு காரணமே சொத்தை அபகரிப்பதற்காகத்தான். எனவே எனது வழக்கிற்கு காரணமாக மேற்கண்ட சூழ்நிலைகள் இருந்ததால் அதை குறித்து சொல்கிறேன். நான் 2015 ம் ஆண்டுக்கு பிறகு தான் விவரம் தெரியவந்ததாக சாட்சியம் அளித்துவிட்டு பின்னிட்டு பொய்யாக இந்த வழக்கிற்கு காரணமே சொத்து பிரச்சனை தான் என்று முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிப்பதற்கு காரணமே இந்த வழக்கு பொய் வழக்கு என்பதால் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீட்டிற்கான உரிமை மூல ஆவணங்கள் சந்திரன் பெயரில் தான் இருக்கிறது என்றால் மோசடியாக கிரயம் செய்ததால் தான் அவருடைய பெயரில் இருக்கிறது. ஆனால் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பும் வந்துவிட்டது. பெயர் மாற்றம் செய்யத்தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம்.

சந்திரன் குடும்பத்தாரை மிரட்டி நாங்கள் துரத்திவிட்டுவிட்டு நாங்கள் அந்த வீட்டில் குடியிருக்கிறோம் என்றால் சரியல்ல. நான் 1990 ம் ஆண்டு பிறந்ததில் இருந்தும் என் சகோதரர் 1985 ம் ஆண்டு பிறந்ததில் இருந்தும் இன்று வரை தாவா சொத்தில் தான் குடியிருக்கிறோம். குடிநீர் இணைப்பு, வீட்டுவரி ரசீது, மின்சார இணைப்பு ஆகிய அனைத்து ஆவணங்களும் இன்றுவரை எங்கள் பெயரில் தான் இருக்கிறது. அதனை ஆவணங்களாக தாக்கல் செய்திருக்கிறோம். நான் சொல்வது போல என் சகோதரர் பிறந்த வருடமான 1985 மற்றும் நான் பிறந்த வருடமான 1990 ம் ஆண்டில் இருந்து தாவா சொத்தில் குடியிருந்து கொண்டு வந்தால் இந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டிய அவசியமே வந்திருக்காது என்றால் சரியல்ல.

சந்திரன் பெயரில் இருக்கும் ஆவணங்களை பதிவு துறை மூலமாக ஆவண பதிவுகளை ரத்து செய்ய வேண்டி நடவடிக்கை ஏதும் எடுத்தேனா என்றால் 2018 ம் ஆண்டு தான் எங்களுக்கு தீர்ப்பு வந்தது, எனவே பதிவுத்துறையை இந்த வழக்கின் தரப்பினராக சேர்த்திருக்கிறோம். நாங்கள் சார்பதிவாளர் அவர்களுக்கு அறிவிப்பு அனுப்பி ஆவணம் ரத்து செய்ய கோரியிருக்கவேண்டும் என்றாலும், அவ்வாறு அறிவிப்பு அனுப்பாததில் இருந்தே பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்பது தெரியவருகிறது என்றால் சரியல்ல.

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(ஒப்பம்/-த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.